**O.S.No.46/2013**

**Date:17.07.2018**

பிரதிவாதி தரப்பு சாட்சி 1 - கணேசன், த-பெ.தங்கமுத்துப்பிள்ளை

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து தெரியுமா என்றால் தெரியாது. தாவாச் சொத்து பூர்வீகச் சொத்து என் தகப்பனாருக்குப் பாத்தியமா என்றால் என் பாட்டானர் சாமி அய்யாப்பிள்ளைக்குப் பாத்தியமானது ஆகும். அவருக்கு எததனை பிள்ளைகள் என்றால் இரண்டு ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தை ஆகும். அவர்கள் பெயர்கள் பொன்னம்பலம் பிள்ளை, தங்கமுத்துப்பிள்ளை மற்றும் கருப்பாயி ஆகும். என் பாட்டனார் எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால் 30.11.1953 ஆகும். எந்த ஆவணத்தை பார்த்தேன் என்றால் வீட்டில் எழுதி வைத்திருந்ததை வைத்து சொல்கிறேன். அதை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். அவர் இறந்த போது அவரது மனைவி உயிரோடு இருந்தாரா என்றால் இல்லை. என் பாட்டானாருக்குப் பின்னர் அவரது இரண்டு ஆண் மக்கள் மற்றும் ஒரு பெண் மகளுக்கும் சொத்து கிடைத்தது என்றால் சரிதான். தங்கமுத்துவிற்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் பாகப்பிரிவினையின்படி கிடைத்தது. யார், யாருக்கிடையே பாகம் ஏற்பட்டது என்றால் பொன்னம்பலம் பிள்ளை, தங்கமுத்துப்பிள்ளை மற்றும் கருப்பாயி ஆகியோருக்கிடையே ஏற்பட்ட பாகத்தில் கிடைத்தது. பாகம் எழுதப்பட்டதா என்றால் எழுதப்பட்டுள்ளது. எந்த வருடம் பாகம் ஏற்பட்டது என்றால் 1953ல் என் தகப்பனார் உயிரோடு இருக்கும் போது பாகம் ஏற்பட்டது. தங்கமுத்துப்பிள்ளையின் தகப்பனார் உயிரோடு இருக்கும் போதே அவருக்கும், அவரது சகோதரர்களுக்கும் பாகம் ஏற்பட்டது. அது பதிவு பெற்ற பத்திரமா என்றால் பதிவு பெற்ற பத்திரம்தான். தங்கமுத்துவுக்கு தாவாச் சொத்து பாகத்தின் போது கிடைத்ததால் அது அவரது தனிப்பட்ட சொத்து என்றால் எனக்குத் தெரியாது. பாட்டனார் பெயரில் ஏதேனும் பட்டா உள்ளதா என்றால் தெரியாது. நான் பிறந்தது 1958ல் ஆகும். பாட்டனார் பெயரில் கிஸ்தி ரசீது எதுவும் உள்ளதா என்றால் எனக்குத் தெரியாது. அவ்வாறு ஆவணங்கள் என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. ஆண்பிள்ளைகளில் நான் மூத்தவர், பெண் குழந்தைகள் எனக்கு மூத்தவர்கள் இருக்கிறார்கள். நான் பழைய எஸ்.எஸ்.எல்.சி வரை படித்துள்ளேன். தாவாச் சொத்துக்கு பட்டா நாளது தேதி வரை தங்கமுத்து பெயரில் உள்ளது என்றால்

சரிதான். 1991க்குப் பின்னர் தங்கமுத்துப்பிள்ளை இறக்கும் வரை அவர்தான் கிஸ்தி செலுத்தி அனுபவம் செய்து வந்ததற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் தேடிப் பார்த்தால் தெரியும். அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வாதியை தெரியுமா என்றால் தெரியும். எத்தனை வருடமாக தெரியும் என்றால் என் அப்பா இறந்த பின்னர் தெரியும். என் அப்பா 2005ல் காலமானார். எதற்காக வாதி வந்தார் என்றால் என் அப்பா பணம் வாங்கியதாக தெரிவித்தார், அதற்கு நாங்கள் மறுப்பு தெரிவித்தோம். என் அப்பா பணம் வாங்கிக் கொண்டு, கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துள்ளதாக வாதி தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார். நான் அந்த கிரைய ஒப்பந்ததை வாங்கி பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை.

(வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா மாற்றப்படுகிறது.)